## வாக்குமூலம்

## குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பல்லடம்

## வழக்கு எண் : CC 301 of 2023

## வழக்கு சாட்சி – PW 4

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.மைதீஸ் | ஜாதி | : | |
| தந்தை பெயர் | : | சுப்பிரமணியம் | தொழில் | : | விவசாயம் |
| கிராமம் | : | கோவில்பாளையம் புதூர் | சமயம் | : | |
| தாலுக்கா | : | திருப்பூர் தெற்கு | வயது | : | 25 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 03.09.2024.

(1 ஆம் எதிரி இல்லை. 1 ஆம் எதிரி சார்பில் பிரிவு 355 BNSS ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. 2 ஆம் எதிரி காணொளி ஆஜர் படுத்தப்பட்டார்).

**முதல் விசாரணை:** **நாள்: 03.09.2024**

1. நான் தற்போது மேற்கண்ட முகவரியில் குடியிருந்துக் கொண்டு விவசாயம் செய்து வருகிறேன். தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகஜரில் உள்ள 2வது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். கடந்த 04.07.2023 ஆம் தேதி போலீசார் பரஞ்ஜோதி வீட்டிற்கு வந்து திருடுபோனது சம்மந்தமாக விசாரணை செய்து பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள். அதற்கு சாட்சியாக நானும், வேலுச்சாமி என்பவரும் சாட்சி கையொப்பம் செய்தோம். அந்த **பார்வை மகஜர் அ.சா.ஆ.2** ஆகும். இது சம்மந்தமாக போலீசார் சம்மந்தமாக என்னை விசாரித்தார்கள்.

**1 ஆம் எதிரி தரப்பு குறுக்குவிசாரணை**

2. திருடுபோனது சம்மந்தமாக சாட்சிக்கு கையொப்பம் கேட்டார்கள் நான் போட்டுக்கொடுத்தேன் என்றால் சரிதான். பார்வை மகஜரில் உள்ள கையொப்பத்தை நான் காவல் நிலையத்தில் வைத்து போட்டேன் என்றால் சரிதான். நான் திருடுபோன பேப்ரில் எவ்வாறு திருடுபோனது என்று எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

**2 ஆம் எதிரி தரப்பு குறுக்குவிசாரணை**

2 ஆம் எதிரி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர். 1 ஆம் எதிரி தரப்பு குறுக்கு

விசாரணையை ஏற்புரை செய்வதாக எடுத்துரைத்தால் அவ்வாறே பதிவு செய்யப்படுகிறது.

மறுவிசாரணை: இல்லை.

சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டது. சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரியென கையெழுத்து செய்தார்.

K CHITHRA Digitally signed by K CHITHRA
Date: 2024.09.03 20:48:28 +0530

நீதித்துறை நடுவர்,
பல்லடம்.

### வாக்குமூலம்

### குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பல்லடம்

### வழக்கு எண் : CC 301 of 2023

### வழக்கு சாட்சி – PW 3

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திருமதி.வினோதினி | ஜாதி | : | |
| கணவர் பெயர் | : | ராஜேஷ்குமார் | தொழில் | : | IT Company வேலை |
| கிராமம் | : | சரவணம்பட்டி | சமயம் | : | |
| தாலுக்கா | : | கோவை | வயது | : | 31 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 03.09.2024.

(1 ஆம் எதிரி இல்லை. 1 ஆம் எதிரி சார்பில் பிரிவு 355 BNSS ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. 2 ஆம் எதிரி காணொளி ஆஜர் படுத்தப்பட்டார்).

**முதல் விசாரணை:** **நாள்: 03.09.2024**

1. நான் தற்போது மேற்கண்ட முகவரியில் குடியிருந்துக் கொண்டு IT Company ல் வேலை செய்து வருகிறேன். அ.சா.1 வள்ளியாத்தாள் எனது அம்மா ஆவார். அ.சா.ஆ.2 பரஞ்ஜோதி எனது அப்பா ஆவார். கடந்த 30.06.2023 ஆம் தேதி எனது அம்மாவும், எனது அப்பாவும் கோவையில் உள்ள எனது வீட்டிற்கு வந்து இருந்தார்கள். பின்னிட்டு மறுநாள் 01.07.2023 ஆம் தேதி எனது அப்பா மட்டும் வீட்டிற்கு வந்துவிட்டு சிறிது நேரம் இருந்துவிட்டு மாலையில் எனது அப்பா எனது வீட்டிற்கு வந்துவிட்டார். பின்னர் 03.07.2023 ஆம் தேதி எனது வீட்டிலிருந்து, நானும், எனது அம்மாவும் காரில் வீட்டிற்கு வந்தோம். நாங்கள் வீட்டிற்கு வந்து பார்த்தபோது சுமார் 10.00 மணி இருக்கும். வீட்டின் கேட் உடைக்கப்பட்டு இருந்தது. வீட்டின் கதவு உடைக்கப்பட்டு இருந்தது. வீட்டின் முன்பக்க கேட் உடைக்கப்பட்டு உள்ளே நிறுத்தி இருந்த Honda Activa இரு சக்கர வாகனம் காணவில்லை. வீட்டிற்குள் சென்று பார்த்தபோது பீரோவில் உள்ள பொருட்கள் கலைந்து இருந்தது. வீட்டிலிருந்த UPS மற்றும் பேட்டரி ஆகியவற்றை காணவில்லை. இது சம்மந்தமாக எனது அப்பாவிற்கு தகவல் கொடுத்தார். எனது அப்பா வந்தவுடன், எனது அப்பாவும், அம்மாவும் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தார்கள். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**1 ஆம் எதிரி தரப்பு குறுக்குவிசாரணை**

2. நான் எனது வீட்டிலிருந்து வேலை பார்த்து வருகிறேன். எனது நிறுவனம் பெங்களூரில் உள்ளது. வேலை நேரம் என்ன என்றால் காலை 9.00 மணிலிருந்து இரவு 7.00 மணி வரை வேலை நேரம் ஆகும். சம்பவத்தன்று நான் வேலை பார்த்தேனா என்றால் இல்லை. அன்று நான் விடுப்பு எடுத்து இருந்தேன். எனது கணவர் ஜெர்மனில் வேலை பார்த்து வந்தார். நான் அவரை பார்ப்பதற்காக திருப்பிரில் எனது அம்மாவை விட்டுவிட்டு நான் பெங்களூரிலிருந்து ஜெர்மனுக்கு சென்றுவிட்டேன். அதனால் மற்ற விபரங்கள் எனக்கு தெரியாது என்றால் சரிதான். போலீசார் விசாரித்தார்கள். நான் சொல்லிவிட்டு கிளம்பிவிட்டேன். அதன்பிறகு நடந்த விபரங்கள் எனக்கு தெரியாது. சம்பவத்தன்றே எனது அம்மா புகார் கொடுத்துவிட்டார் என்றால் சரிதான். உண்மையில் நான் சொன்ன நேரம், சொன்ன நாள், சொன்ன விதத்தில் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல.

**2 ஆம் எதிரி தரப்பு குறுக்குவிசாரணை**

2 ஆம் எதிரி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர். 1 ஆம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணையை ஏற்புரை செய்வதாக எடுத்துரைத்தால் அவ்வாறே பதிவு செய்யப்படுகிறது.

மறுவிசாரணை: இல்லை.

சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டது. சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரியென கையெழுத்து செய்தார்.

K CHITHRA Digitally signed by K CHITHRA
Date: 2024.09.03 20:48:34 +0530

நீதித்துறை நடுவர்,
பல்லடம்.

**வாக்குமூலம்**

**குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பல்லடம்**

**வழக்கு எண் : CC 301 of 2023**

**வழக்கு சாட்சி – PW 2**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.பரஞ்ஜோதி | ஜாதி | : | |
| தந்தை பெயர் | : | முத்துசாமி | தொழில் | : | அரசு பேருந்து ஓட்டுநர் ஓய்வு |
| கிராமம் | : | கோவில்பாளையம் | சமயம் | : | |
| தாலுக்கா | : | திருப்பூர் தெற்கு | வயது | : | 60 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 03.09.2024.

(1 ஆம் எதிரி இல்லை. 1 ஆம் எதிரி சார்பில் பிரிவு 355 BNSS ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. 2 ஆம் எதிரி காணொளி ஆஜர் படுத்தப்பட்டார்).

**முதல் விசாரணை:** **நாள்: 03.09.2024**

1. நான் தற்போது மேற்கண்ட முகவரியில் குடியிருந்துக் கொண்டு வருகிறேன். அ.சா.1 வள்ளியாத்தாள் எனது மனைவி ஆவார். கடந்த 30.06.2023 ஆம் தேதி நானும், எனது மனைவியும் கோவையில் உள்ள எனது மகள் வீட்டிற்கு சென்று இருந்தோம். மறுநாள் 01.07.2023 ஆம் தேதி நான் மட்டும் வீட்டிற்கு வந்துவிட்டு சிறிது நேரம் இருந்துவிட்டு மாலையில் நான் எனது மகள் வீட்டிற்கு சென்றுவிட்டேன். பின்னர் 03.07.2023 ஆம் தேதி எனது மகள் வீட்டிலிருந்து, எனது மனைவியும், எனது மகளும் காரில் வீட்டிற்கு வந்துவிட்டார்கள். நான் பின்னால் பேருந்தில் வந்தேன். எனது மகளும், மனைவியும் வீட்டிற்கு வந்து பார்த்தபோது வீட்டின் முன்பக்க கேட் உடைக்கப்பட்டு உள்ளே நிறுத்தி இருந்த Honda Activa இரு சக்கர வாகனத்தை திருடிவிட்டதாகவும், பின்னர் வீட்டின் ரூமிலிருந்த UPS மற்றும் பேட்டரி ஆகியவற்றை திருடிவிட்டதாகவும், வீட்டில் வைத்திருந்த பணம் திருடுபோய்விட்டதாக எனது மனைவி எனக்கு சொன்னார். நான் வந்து பார்த்துவிட்டு காவல் நிலையத்திற்கு எனது மனைவியை அழைத்து சென்று புகார் கொடுத்தோம். நான் உடனிருந்தேன்.

2. பின்னர் அன்று மாலை திருடுபோன வண்டி, பேட்டரி, UPS கிடைத்திருப்பதாக காவல் நிலையத்திலிருந்து தகவல் சொன்னார்கள். நாங்கள் சென்று அடையாளம்

காண்பித்தோம். பிறகு நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்ட வழக்கு சொத்துக்களை மனுதாக்கல் செய்து இடைக்காலப்பொறுப்பில் பெற்றுச்சென்றோம். ஏற்கனவே அ.சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள புகைப்படத்தில் உள்ள வண்டி தான் எனது வண்டி ஆகும். அந்த வண்டி தான் திருடுபோன வண்டி ஆகும். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>1 ஆம் எதிரி தரப்பு குறுக்குவிசாரணை</u>**

3. தகவல் கிடைத்து 2 மணி நேரத்தில் சுமார் 12.00 மணியளவில் வீட்டிற்கு வந்துவிட்டேன். நான் வீட்டிற்கு வந்தபோது போலீசார் வீட்டிற்கு வந்து இருந்தார்கள். நான் வந்து பார்த்தபோது போலீசார் கைரேகை மாதிரிகளை எடுத்துக்கொண்டிருந்தார்கள் என்றால் சரிதான். புகார் கொடுக்க யார் யார் சென்றோம் என்றால் நானும், எனது மனைவியும் சம்பவத்தன்று மதியம் 3.00 லிருந்து 4.00 மணிக்குள் சென்று புகார் கொடுத்தோம். அருகில் இருந்த கண்காணிப்பு கேமிராக்களின் பதிவுகளை போலீசார் பார்த்தார்களா என்றால் பார்த்தார்கள். புகார் கொடுத்த அன்று மலையிலேயே காணமால்போன பொருட்கள் அனைத்தும் கிடைத்துவிட்டது என்றால் சரிதான். ஈஸ்வரமூர்த்தி, பூமிநாதன் எனது வீட்டிற்கு பக்கத்துவீட்டுக்காரர்கள் என்றால் சரிதான். போலீசார் விசாரணையின்போது அவர்கள் இருந்தார்களா என்றால் இருந்தார்கள். சாட்சிகள் வேண்டும்என்று போலீசார் பக்கத்து வீட்டுக்காரர்களை போலீசார் சாட்சியாக போட்டார்கள் என்றால் சரிதான்.

4. என்னை விசாரிக்கும்போதே சாட்சிகளின் பெயர், முகவரி ஆகியவற்றை கேட்டு தெரிந்து கொண்டார்கள் என்றால் சரிதான். அப்போது அவர்கள் கையொப்பம் செய்தார்களா என்று எனக்கு தெரியாது. உண்மையில் நான் சொன்ன நேரம், சொன்ன நாள், சொன்ன விதத்தில் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல.

**<u>2 ஆம் எதிரி தரப்பு குறுக்குவிசாரணை</u>**

2 ஆம் எதிரி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர். 1 ஆம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணையை ஏற்புரை செய்வதாக எடுத்துரைத்தால் அவ்வாறே பதிவு செய்யப்படுகிறது.

மறுவிசாரணை: இல்லை.

சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டது. சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரியென கையெழுத்து செய்தார்.

K CHITHRA
Digitally signed by K CHITHRA
Date: 2024.09.03 20:48:40 +0530

நீதித்துறை நடுவர்,
பல்லடம்.

## வாக்குமூலம்

## குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பல்லடம்

## வழக்கு எண் : CC 301 of 2023

## வழக்கு சாட்சி – PW 1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திருமதி.வள்ளியாத்தாள் | ஜாதி | : | |
| கணவர் பெயர் | : | பரஞ்ஜோதி | தொழில் | : | இல்லதரசி |
| கிராமம் | : | கோவில்பாளையம் | சமயம் | : | |
| தாலுக்கா | : | திருப்பூர் தெற்கு | வயது | : | 55 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 03.09.2024.

(1 ஆம் எதிரி இல்லை. 1 ஆம் எதிரி சார்பில் பிரிவு 355 BNSS ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. 2 ஆம் எதிரி காணொளி ஆஜர் படுத்தப்பட்டார்).

**முதல் விசாரணை:** **நாள்: 03.09.2024**

1. நான் தற்போது மேற்கண்ட முகவரியில் குடியிருந்துக் கொண்டு வருகிறேன். எனக்கு தேவந்திரன் என்ற மகனும், வினோதி என்ற மகளும் உள்ளனர். அவர்கர் திருணம் செய்து தனித்தனியாக குடியிருந்து வருகிறார்கள். கடந்த 30.06.2023 ஆம் தேதி என் மகள் வீட்டிற்கு நானும், எனது கணவரும் சென்றுவிட்டோம். மறுநாள் எனது கணவர் எங்கள் வீட்டிற்கு வந்துவிட்டு அதற்கிடையில் கோவையில் உள்ள எனது மகள் வீட்டிற்கு வந்துவிட்டார். பின்னிட்டு 03.07.2023 ஆம் தேதி 10.00 மணிக்கு நானும், எனது மகளும் கோவையிலிருந்து புறப்பட்டு வீட்டிற்கு வந்து வீட்டை பார்த்தபோது வீட்டின் வெளி கேட்டில் இருந்த பூட்டு உடைக்கப்பட்டு இருந்தது. வீட்டிற்கு வெளியே கேட்டிற்கு நிறுத்தி இருந்த ஸ்கூட்டி இருசக்கர வாகனம் காணமால் போயிருந்தது. உள்ளுக்கு சென்று பார்த்தபோது உண்டியலில் வைத்திருந்த ரூ.1800/– பணத்தை காணவில்லை. பக்கத்து ரூமில் சென்று பார்த்தபோது UPS பேட்டரியை காணவில்லை.

2. பின்னர் சத்தம்போட்டேன். பக்கத்தில் உள்ளவர்கள் வந்தார்கள். பிறகு எனது கணவருக்கு தகவல் தெரிவித்தேன். இது சம்மந்தமாக அவிநாசிபாளையம் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள

கையொப்பம் என்னுடையது தான். அந்த **புகார் அ.சா.ஆ.1** ஆகும். அன்றே மாலை 5.00 மணிக்கு திருடுபோன பேட்டரி மற்றும் வண்டி கிடைத்திருப்பதாக தகவல் சொன்னார்கள். நான் அவிநாசிபாளையம் காவல் நிலையம் சென்று வண்டி மற்றும் பேட்டரியை அடையாளம் காண்பித்தேன். திருடபோன பணத்தை கொடுத்தார்கள். எவ்வளவு கொடுத்தார்கள் என்பது தற்போது ஞாபகம் இல்லை. பிறகு நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்ட வழக்கு சொத்துக்களை மனுதாக்கல் செய்து புகைப்படம் எடுத்துக்கொடுத்து இடைக்காலப்பொறுப்பில் பெற்றுச்சென்றேன். அந்த **பேட்டரி, UPS மற்றும் வண்டியை காண்பிக்ககூடிய புகைப்படங்கள் அ.சா.பொ.1 ஆகும்** ஆகும். இது சம்மந்தமாக போலீசார் வழக்கு பதிவு செய்து என்னை விசாரித்தார்கள்.

**1 ஆம் எதிரி தரப்பு குறுக்குவிசாரணை**

3. நான் வீட்டிற்கு எப்போது வந்து பார்த்தேன் என்றால் 3 ஆம் தேதி காலை 10.00 மணிக்கு வந்து பார்த்தேன். திருப்பூர்–தாராபுரம் மெயின் ரோட்டை உள்ள வீட்டில் உள்ளேன் என்றால் சரிதான். போக்குவரத்து மிகுந்த சாலை என்றால் சரிதான். தேசிய நெடுஞ்சாலை ஆகும். திருடுபோனது சம்மந்தமாக போனில் காவல் நிலையத்திற்கு தகவல் சொன்னேன். உடனே போலீசார் வந்து பார்த்தார்கள். தகவல் தெரிந்தவுடன் போலீசார் ஒரு மணிநேரத்தில் வந்துவிட்டார்கள். போலீசார் வந்து கைரேகை மாதிரிகள் மற்றும் உடைந்த பூட்டுகளை எடுத்துச்சென்றார்களா என்றால் மதியம் வந்து கைரேகை எடுத்தார்கள். உடைந்த பூட்டு பற்றி எனக்கு தெரியாது. எங்களது வீட்டில் கண்காணிப்பு கேமிரா இல்லை. பக்கத்து வீட்டில் உள்ளது. அதை பார்த்தார்களா என்றால் எனக்கு தெரியாது.

4. திருடுபோன வாகனத்தின் சாவியை வண்டியிலேயே வைத்திருந்தேனா என்றால் இல்லை. வீட்டிற்குள் உள்ள மரப்பலகையில் வைத்திருந்தேன். முதல் விசாரணையில் சொல்லியுள்ளவிபரங்களை தான் போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். உண்டியலில் போட்ட பணம் என்பதால் உண்டியலில் எவ்வளவு பணம் இருந்தது என்பது எனக்கு தெரியாது என்றால் சரிதான். போலீசார் சொன்னதன்பேரில் உண்டியலில் ரூ.1800/– பணம் இருந்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அதனடிப்படையில் நான் சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரிதான். புகாரினை யார் எழுதியது என்றால் காவல்

நிலையத்தில் இருந்த ஒரு நபர் எழுதிகொடுத்தார். நான் படித்து பார்த்து கையொப்பம் செய்தேன். கைப்பட எழுதிய புகாரில் நான் கையொப்பம் செய்தேன். அதற்கு பிறகு நீதிமன்றத்தில் வந்து பொருட்களை வாங்கும்போது கையொப்பம் போட்டேனா என்றால் போட்டேன். அதற்கு இடையில் வேறு எங்கும் கையொப்பம் போட்டேனா என்றால் இல்லை. மைரீஸ் எனது பக்கத்துவீட்டுக்காரர். எனது உறவினர் ஆவார். வேலுச்சாமி எனது உறவினர் ஆவார். ஈஸ்வரமூர்த்தி, பூமிநாதன் ஆகியோர்கள் எனது பக்கத்து வீட்டுக்காரார்கள் என்றால் சரிதான். அவர்கள் காவல் நிலையத்திற்கு வந்தார்களா என்றால் இல்லை. அவர்கள் எனது வீட்டிற்கு சம்பவம் குறித்து கேட்டு தெரிந்து கொள்ள வந்தார்கள். அப்போது அவர்கள் கையொப்பம் செய்தார்களா என்றால் எனக்கு தெரியாது.

5. திருடுபோன பேட்டரி சம்மந்தமாக அதன் வகை, பில், எண் ஆகியவற்றை புகாரில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். உண்மையில் நான் சொன்ன நேரம், சொன்ன நாள், சொன்ன விதத்தில் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல.

**<u>2 ஆம் எதிரி தரப்பு குறுக்குவிசாரணை</u>**

2 ஆம் எதிரி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர். 1 ஆம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணையை ஏற்புரை செய்வதாக எடுத்துரைத்தால் அவ்வாறே பதிவு செய்யப்படுகிறது.

மறுவிசாரணை: இல்லை.

சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டது. சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரியென கையெழுத்து செய்தார்.

K CHITHRA

Digitally signed by K CHITHRA
Date: 2024.09.03 20:48:45 +0530

நீதித்துறை நடுவர்,
பல்லடம்.